# நூல்தேட்டம்: ஓர் மதிப்பீட்டு ஆய்வு

அனிதா கிருஸ்னசாமி
கோண்டாவில் பொதுநூலகம்
கோண்டாவில், யாழ்ப்பாணம்

கல்பனா சந்திரசேகர்
யாழ் பல்கலைக்கழகம், யாழ்ப்பாணம்
e-mail: kchandrasekar68@gmail.com

இன்றைய தகவல் யுகத்தில், மனிதனுக்கான அடிப்படைத் தேவைகளுள் ஒன்றாகத் தகவலும் கருதப்படுகிறது. தகவல் பெருக்கம், மற்றும் தகவல் வெடிப்பின் காரணமாக பல்வேறு இடங்களில் சிதறிக் காணப்படும் தகவல் சாதனங்களிலிருந்து வாசகரொருவர் தமக்கு தேவையான தகவல் அனைத்தையும் தேடிப்பெற்றுக் கொள்வது கடினமானதாக உள்ளது. தகவல் தேடலுக்கான விரைவானதும், சுலபமானதுமான அணுகுமுறைகள், பல்வேறு அறிவுசார் துறைகளின் வளர்ச்சிக்கு மிகவும் இன்றியமையாதனவாக உள்ளன. வாசகரொருவரின் தேடலை பூர்த்தி செய்யக்கூடிய பொருத்தமான தகவலை இலகுவாக அடையாளம் கண்டு, விரைவாகப் பெற்றுக் கொள்வதற்கு நூல்விபரப்பட்டியல்கள், சுட்டிகள் என்பன பெரிதும் உதவுகின்றன.

நூல்விபரப்பட்டியல் என்பது எழுதப்பட்ட மற்றும் வெளியிடப்பட்ட ஆவணங்களுடைய விபரங்கள் அடங்கிய பட்டியல்களை முறையான ஒழுங்கமைப்பில் தயாரிக்கும் செயற்பாடாகவே வரைவிலக்கணப்படுத்தப்படுகிறது. அந்த வகையில், ***நூல்தேட்டம்*** எனும் வெளியீடானது, இலங்கையிலும் புலம்பெயர்நாடுகளிலும் வெளியிடப்பட்ட ஈழத்து தமிழ் ஆவணங்களின் விபரங்களை உள்ளடக்கிய ஒரு நூல்விபரப்பட்டியலாகத் திகழ்கிறது. இதன் முதலாவது தொகுதி 2002ம் ஆண்டில் வெளியிடப்பட்டது. இதுவரையில், எட்டு தொகுதிகள் வெளிவந்துள்ளன. ஒவ்வொரு தொகுதியிலும் 1000 நூல்களின் விபரங்கள் உள்ளடக்கப்பட்டுள்ளன. சென்னைப் பல்கலைக்கழகத்தின் தமிழ்த்துறை சார்ந்த கற்கைநெறிகளுக்கு ஓர் உசாத்துணை சாதனமாக முன்மொழியப்பட்டுள்ள இந்நூல்விபரப்பட்டியல் தொடர்பான மதிப்பீடாக இவ்வாய்வு அமைகிறது.

உசாத்துணை சாதனமொன்றின் மதிப்பீட்டு பிரமாணங்களாக விளங்கும் அதிகாரவுடைமை (authoritative), நோக்கம் (purpose), வியாபகத்தன்மை (coverage), நம்பகத்தன்மை (reliability), உடனடித் தகவல் வழங்கல் (up-to-date information) என்பவற்றின் அடிப்படையில் இந்நூல்விபரப்பட்டியலானது மதிப்பீடு செய்யப்பட்டுள்ளது. ***நூல்தேட்டம்*** எனும் இந்நூல்விபரப்பட்டியலானது ஒரு தனிமனித முயற்சியாகவே இன்றுவரை தொடர்கிறது. இப்பணியில் கடந்த பல வருடங்களாக தம்மை ஈடுபடுத்திக் கொண்டுள்ள திரு.என்.செல்வராஜா அவர்கள் நூலகவியல் துறையில் நிறைந்த அனுபவமிக்கவர் என்பதோடு, வெளியீட்டுத்துறையிலும் நன்கு அறிமுகமானவர். *அயோத்தி நூலக சேவைகள்* எனும் நிறுவனத்தை ஸ்தாபித்து, அந்நிறுவனத்தினூடாக நூலகவியல் துறைசார்ந்த நூல்களை வெளியிட்டு வருகிறார். இந்நூல்விபரப்பட்டியலும், இந்நிறுவனத்தினால் இலங்கையின் வெளியீட்டுத்துறையில் தமிழ் நூல்களுக்கான வெளியீட்டு நிறுவனங்களுள் முக்கிய இடத்தை பெற்றுள்ள *குமரன் புத்தக இல்லம்* எனும் வெளியீட்டாளரினது ஆதரவுடன் வெளியிடப்படுகிறது. எனவே, அதிகாரபூர்வமான ஒரு உசாத்துணை சாதனமாக இது ஏற்றுக்கொள்ளப்படக்கூடியதே. எனினும், திரு.என்.செல்வராஜா அவர்களினால் முன்னெடுக்கப்பட்டுவரும் இப்பணி, மேலும் பன்நெடுங் காலத்திற்கு தொடருவதற்கான காத்திரமான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட வேண்டியது இன்றியமையாததாகும்.

அடுத்து இந்நூல்விபரப்பட்டியலினுடைய முக்கிய நோக்கம் ஈழத்து தமிழ் பண்பாடு, கலாச்சாரம், பொருளாதாரம், சமயம், சமூகம், வரலாறு, மற்றும் ஏனைய துறைசார்ந்த வெளியீடுகளை ஆவணப்படுத்துவதும், அவை தொடர்பான தேடலை மேற்கொள்பவர்களுக்கு உசாத்துணை சாதனமாக விளங்குவதுமாகுமென இதன் ஆசிரியரினால் தெரிவிக்கப்படுகிறது. இதற்கு மேலதிகமாக, பிரதேச ரீதியாக குறித்த இனம் சார்ந்த, மொழி சார்ந்த வெளியீடுகளை ஆவணப்படுத்தும் பாரிய முயற்சியாகவும், இச்சமூகம் சார்ந்த வரலாற்று பதிவுகளை அடுத்த தலைமுறைக்கு கையளிக்கும் செயற்பாடாகவுமே நோக்கப்பட வேண்டியதாகும். நிறுவன ரீதியான நிதியுதவிகள், ஆதரவுகள் எதுவுமின்றி, தனிமனித முயற்சியால் வெளிக்கொணரப்படும் இந்நூல்விபரப்பட்டியலானது, உரிய வாசகர்களை சரியான முறையில் சென்றடையவில்லை என்பது ஒரு குறைபாடாகவே காணப்படுகிறது.

இந்நூல்விபரப்பட்டியலில், அதிகளவில் தனிநூல்களே (monographs) இடம்பெற்றுள்ளன. இவைதவிர, தனிநூலாக கருதப்படக்கூடிய சிறப்புமலர்களும், சில கல்வெட்டுக்களும், ஞாபகார்த்த மலர்களும் உள்ளடக்கப்பட்டுள்ளன. ஆனால், சஞ்சிகைகள், துண்டுப்பிரசுரங்கள், வரைபடங்கள், கையெழுத்துப்பிரதிகள், ஒலி-ஒளிப்பதிவு நாடாக்கள், இறுவட்டுக்கள் என்பன சேர்த்துக்கொள்ளப்படவில்லை. விடயரீதியாக நோக்குகையில், சகல துறைசார்ந்த ஆவணங்களும் உள்வாங்கப்பட்டுள்ளன. நூலியல் பதிவை பொறுத்தவரையில், அடிப்படை நூலியல் விபரங்களும், நூல் பற்றிய அறிமுகக் குறிப்பும் தெளிவாகத் தரப்பட்டுள்ளன. நூலியல் பதிவுகளின் ஒழுங்கமைப்பில் சர்வதேச நூற்பட்டியலாக்க விதிமுறைகள் முறையாக பின்பற்றப்பட்டுள்ளதை அவதானிக்கமுடிகிறது. ஒரு நூலகவியலாளரினால் தொகுக்கப்பட்ட நூல்விபரப்பட்டியல் என்பதை இது அடையாளம் காட்டுகிறது. மேலும், ஒவ்வொரு ஆவணமும் முழுமையாக ஆராயப்பட்டே பதிவிற்குள்ளாக்கப்பட்டுள்ளதை, துல்லியமான பாரபட்சமற்ற தகவல்களை கொண்ட நூலியல் பதிவுகள் உணர்த்துகின்றன. கிடைக்கப்பெற்ற ஆவணங்களின் அடிப்படையிலேயே பதிவுகள் மேற்கொள்ளப்பட்டமையினால், காலஒழுங்கு, மற்றும் நூல்களுக்கான தரக்கட்டுப்பாடு என்பன வரையறுக்கப்படவில்லை.

தனிமனித முயற்சியின் வெளிப்பாடாக விளங்கும் இந்நூல்விபரப்பட்டியல், ஈழத்தமிழருக்கான ஒரு தேசிய நூல்விபரப்பட்டியலின் தேவையை உணர்த்தி நிற்கின்றது. எதிர்காலத்தில், இம்முயற்சியானது நிறுவனமயப்படுத்தப்பட்டதாக மாற்றம்பெற்று, நூலுருவிலான, மற்றும் நூலுருவற்ற தகவல் சாதனங்களின் விபரங்களையும் உள்ளடக்கும்போது இது சாத்தியமாகலாம்.

**மூலச்சொற்கள்:** நூல்விபரப்பட்டியல்-மதிப்பீடு; ஆவணவாக்கம்